வளனாய்வம்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# மேல்சீசமங்கலம் முனீஸ்வரர் குலதெய்வ வழிபாடு


| | |
|---|---|
| **மு. ஷோபனா,** | **ச.சந்தோஷ்குமார்,** |
| இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு, | உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, |
| தட்சசீலா பல்கலைக்கழகம், | தட்சசீலா பல்கலைக்கழகம், |
| ஓங்கூர், திண்டிவனம். | ஓங்கூர், திண்டிவனம். |
| n0469158@gmail.com | santhoshkumar.s@takshashilauniv.ac.in |
| 9787768323 | 9500463540 |


முன்னுரை:

குலத்தினை காக்கும் தெய்வம் குலதெய்வம் ஆகும். குலதெய்வத்தினை குலதேவதை என்று அழைப்பர். குடும்பத்தில் ஒரு கஷ்டம் எனில், கூப்பிட்ட குரலுக்கு ஏன் கூப்பிடாமலே கூட வந்து உங்கள் துக்கங்களைப் போக்குவது உங்கள் குலதெய்வமே. அந்த வகையில் நாம் இந்த கட்டுரையில் மேல்சீசமங்கலத்தில் இருக்கும் முனீஸ்வரரின் கதையும், அவரின் சிறப்புகளைப் பற்றியும் இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

ஊர் அமைவிடம்:

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யார் வட்டாரத்தில் அமைந்துள்ளது. இந்த ஊராட்சி, ஆரணி சட்டமன்றத் தொகுதிக்கும் ஆரணி மக்களவைத் தொகுதிக்கும் உட்பட்டதாகும். இந்த ஊராட்சி, மொத்தம் 7 ஊராட்சி மன்றத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் இருந்து 7 ஊராட்சி மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். 2011ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகை 4929 ஆகும். இவர்களில் பெண்கள் 2512 பேரும் ஆண்கள் 2417 பேரும் உள்ளனர்.

குலதெய்வம்:

குலத்தினைக் காக்கும் தெய்வம் குலதெய்வம். தெய்வங்களில் மிகவும் வலிமையான தெய்வம் குலதெய்வம். குலதெய்வமே எளிதில் அருளினைத் தரும். மேலும் மற்ற தெய்வங்களின் வழிபாடுகளின் பலன்களையும் பெற்றுத் தரும். குலதெய்வம் பெரும்பாலும் சிறுதெய்வமாகவே காணப்படும். ஆனால், அதன் சக்தியை அளவிட முடியாது. சிறுதெய்வம் என்று நாம் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. சாதரணமாக கோவில்களுக்குச் செல்லும் போது தேங்காய், பழம் வாங்கி அர்ச்சனை செய்து திரும்புவீர்கள். ஆனால் குலதெய்வத்தை வழிபடச் செல்லும் போது கூடுதலாக ஒரு கடமையும் இருக்கின்றது. நமது குலதெய்வம் கோவிலுக்குச் சென்றதும் பொங்கல் வைத்து படையல் போட்டு வணங்கிய பின்னரே, அர்ச்சனை செய்து திரும்ப வேண்டும்.இதை செய்வதே முறையான குலதெய்வ வழிபாடு ஆகும்.

குலதெய்வம் கோவிலுக்குச் சென்றே நேர்த்திக் கடனை செலுத்திட வேண்டும். குலதெய்வங்களான அய்யனார், முனீஸ்வரர், வேடப்பர், கருப்பு இந்த எல்லை தெய்வங்கள் ஆகியவை ஆகும். எந்த காரியம் செய்தாலும் முதலில் குலதெய்வ வழிப்பாட்டை செய்ய வேண்டும். குலதெய்வ தோஷம் இருந்தால், மற்ற தெய்வங்களின் அருள் கிடைக்காது. குலதெய்வத்தின் அனுமதி அல்லது அனுகிரகம் இல்லை என்றால் ஒருவர் என்னதான் சக்தி வாய்ந்த ஹோமம், யாகம் செய்தாலும், ஆலயங்களுக்கு சென்றாலும் எதிர்பார்த்த பலன் தருமா என்பது சந்தேகம்தான்.

ஒருவர் எந்த வழிபாடு செய்யாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் குலதெய்வ வழிபாடு மட்டும் செய்யாமல் இருக்கவே கூடாது. தங்கள் குடும்பத்துக்கும், உறுப்பினர்களுக்கும் எவ்வித தீங்கும் ஏற்படாது வளமையான வாழ்க்கை கிடைப்பதாக மக்கள் கருதுகின்றனர். குல தெய்வ வழிபாடில்லாமல் தொடங்கும் எந்த ஒரு செயலும் நன்றாக முடிவதில்லை. எனவே இவ்வழிபாடு எல்லாவற்றிலும் முதன்மையானது என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவுகின்றது.

வருடத்திற்கு ஒருமுறையாவது குல தெய்வ கோவிலுக்குச் சென்று வழிபாடு மேற்கொள்கின்றனர். எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் முதல் வழிபாடு குல தெய்வத்திற்கு நடைபெறும். அதன் பிறகு தான் மற்ற நிகழ்ச்சிகளை துவக்குவதும் நாம் கூப்பிடாமல் உதவி செய்யும் தெய்வம் குல தெய்வம் என்கின்ற கருத்தும் மக்களிடம் நிலவுகிறது.

குல தெய்வத்தை மறப்பது பெற்றோரை மறப்பது போன்றது. மேலும் குல தெய்வ சாபம் வம்சத்தை சீரழிக்கும் போன்றவற்றை மக்கள் ஆணித்தரமாக நம்புகின்றனர்.

எமன் கூட ஒருவரின் குலதெய்வத்தின் அனுமதி பெற்றுத் தான் உயிரை எடுக்கமுடியும். குலதெய்வம் என்பது நமது முன்னோர்களில் தெய்வமாக மாறிவிட்ட புண்ணிய ஆத்மாக்கள் ஆகும். அந்த புனித ஆத்மாக்கள் தங்களின் குலத்தினை சார்ந்தவர்களைக் கண்ணும் கருத்துமாக பேணிக் காக்கும் வல்லமை படைத்தவை. எனவே தான் அந்த தெய்வங்கள் குலதெய்வங்கள் என்ற சிறப்புடன் அழைக்கப்படுகின்றன.

முனீஸ்வரன் உருவான கதை:

முனீஸ்வரன் பல ஊர்களில், பலரின் குலதெய்வமாக உள்ளார். அந்த வகையில் மேல்சீசமங்கலம் என்ற கிராமத்திலும் கோவில் கொண்டு பலருக்குக் குலதெய்வமாக இருந்து வருகிறார். இவர் இரவு நேரங்களில் உலா வந்து துஷ்ட சக்திகளை அடியோடு ஒழித்துக் காத்து வருகிறார் என்று நம்பப்படுகிறது. அந்த வகையில், இக்கிராமத்தில் முனீஸ்வரர் எவ்வாறு அவதரித்தார் என்ற வரலாறு பற்றி கொஞ்சம் பார்ப்போம். கிராமத்தின் எல்லையில் மிரட்டும் தோணியில் கையில் அரிவாளுடன் பெரிதாய் கட்டையில் அமர்ந்திருக்கும் சிலை, அவருக்கு முன்னால் இரண்டு கால்களையும் தூக்கியவாறு இருக்கும், குதிரை சிலை நின்று கம்பீரமாய் நிற்கும் எல்லை தெய்வம் தான் முனீஸ்வரர். இவர் சிறுதெய்வங்களில் முக்கிய சிறுதெய்வமாகக் கருதப்படுகிறது. இவர் இரவு நேரங்களில் இந்த கிராமங்களில் வலம் வருவதாகவும் நம்பப்படுகிறது. இவரை கிராமங்களில் வீடுகளில் குடும்பத்தில் ஒருவராகவே பார்த்து வருகின்றனர். ஆனால் புராணங்களின் படி இவருக்கு இன்னொரு கதையும் உண்டு.

முன்னொரு காலத்தில் அந்தகாசுரன் என்னும் அசுரன் "தேவலோகத்தையே ஆட்சிபுரிய வேண்டும், எனக்கு சிவனாலும் விஷ்ணுவாலும் அழிவு ஏற்படக்கூடாது" என்று பிரம்மனிடம் வேண்டி வரம் பெற்றான். பின் தேவர்களையும், மக்களையும் வதைத்து இடையூறு செய்து வந்தான். அந்த அசுரனிடம் இருந்து தங்களைக் காக்கும்படி அன்னை பராசக்தியை அனைவரும் வேண்டினர். பின் பார்வதி அம்மன் காத்தாயி என்ற பெயரில் பூமியில் அவதரித்தார். அசுரனை அழிக்க காத்தாயி அம்மன் லாடமுனி, முத்துமுனி, செம்முனி, கருமுனி, கும்பமுனி, வால்முனி, கட்டைமுனி என்று ஏழு முனிகளை உருவாக்கினார். அவர்கள் அனைவரும் சேர்ந்து அந்தகாசுரனை

அடக்கி வதம் செய்தார்கள். பின்னர், முனிகள் அனைவரும் ஒரே வடிவமாக கலியுகத்தில் மக்களைக் காப்பதற்காக பூமிக்கு வந்தனர். இவர்களின் அம்சமாக விளங்குபவரே முனீஸ்வரன் ஆவார். என்னதான் இப்படி ஒரு புராணக்கதை இருந்தாலும், இவர் சிறுதெய்வமாகவும், நமது முன்னோர்களில் ஒருவராகவும் மட்டுமே இன்றும் பார்க்கப்பட்டு வருகிறார்.

முனீஸ்வரனின் முன்மாதிரியான சித்தரிப்பு:

முனிஸ்வரன் பிரகாசமான முகம், அடர்த்தியான மீசை, பெரும்பாலும் எளிய வெள்ளை பருத்தி வேட்டி அணிந்த தலைக்கவசம், நகைகள் மற்றும் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு தனது இரணடு கைகளிலும் திரிசூலம் மற்றும் கதாயுத்தை ஏந்திய ஒரு திடகாத்திரமான மனிதராக சித்தரிக்கப்படுகிறார். அவர் அமர்ந்திருப்பவராக காட்டப்படுகிறார்.

வேறுபெயர்கள்:

சிவமுனி, மகாமுனி, ஞானமுனி, பாண்டிமுனி, தர்மமுனி, நாதமுனி, ஜடாமுனி, கரிமுனி, வாமுனி, செம்முனி, மும்முனி, வால்முனி, தவமுனி என்று பல பெயர்களைக் கொண்டு பல ஊர்களில் அழைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது.

வழிபாடு:

மக்கள் முனீஸ்வரரைக் காவல் தெய்வமாகவே வணங்குகிறார்கள்.

- தொடக்கத்தில் ஒரு கல்லையும், சூலாயுதம் ஒன்றையும் ஒரு சிறுகுடிலில் நிறுவி அதையெ ஆலயமாக வழிபட்டனர்.
- தற்போது, இரண்டு முனீஸ்வரர்களின் கம்பீரமான சிலையை வைத்து வழிபடுகின்றார்கள்.
- முனீஸ்வரர் வழிபாடு என்பது காலம் காலமாக கிராம மக்கள் மட்டுமல்லாது நகரத்து மக்களும் பயபக்தியுடன் வணங்கக்கூடிய தெய்வ வழிபாடாகும்.
- முனீஸ்வரர் நள்ளிரவு 12 மணிக்கு மேல் 5 மணிக்குள் மட்டுமே நகர்வலம் வருவதாக கிராமங்களில் நம்பிக்கை நிலவுகிறது.
- பெரும்பாலும் முனீஸ்வரர் கோவிலில் மேல்விதானம் இருக்காது.

முனீஸ்வரர் பூஜை சாமான்கள்:

பொதுவாக இருக்கும் பூஜை பொருட்களான மஞ்சள், குங்குமம், சந்தனம், திருநீர், புஷ்பம், கற்பூரம், ஊதுவத்தி, வெற்றிலை-பாக்கு, சாம்பிராணி, கோமியம்,

பால், தயிர், நெய், தேன், பன்னீர், இளநீர், கதம்ப பொடி, வஸ்திரம், நூல் உருண்டை ஆகிய பொருட்களைக் கொண்டு வழிபடுகின்றனர்.

முனீஸ்வரர் படையல்:

முனீஸ்வரருக்கு வாரத்தின் திங்கட்கிழமை அன்று படையலிடுவார்கள். அப்படையலில் பொரி, கடலை, அவல், நாட்டுச்சர்க்கரை, கற்கண்டு, வெல்லம், பழவகைகள், சுருட்டு, கள், வெண்பூசணிகாய், எழுமிச்சைப் பழம், தேங்காய், சர்க்கரை பொங்கல் ஆகியவற்றைக் கொண்டு படையலிடுவார்கள். அத்துடன் ஆடு, கோழி ஆகியவற்றையும் பழியிட்டு வழிபடுவார்கள்.

முடிவுரை:

இவ்வாறாக, மேல்சீசமங்கலம் என்ற கிராமத்தில் இருக்கும் குலதெய்வமான முனீஸ்வரர் சிறப்பாக இக்கிராமத்தினை கண்ணும் கருத்துமாக இருந்து காத்து வருகிறார் என்பதையும், இவர்கள் வழிபாடு செய்யக்கூடிய முறைகள் குறித்தும், அவரின் தோற்றம் குறித்தும் விரிவாக இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.